A/L 89
கலை, வர்த்தக விஞ்ஞான
வகுப்புக்கள்
எமது வழமையான
"SUPER GRADE"
ஆசிரியர்களினால்
ஆரம்பமாகிவிட்டன
விபரங்கட்கு:
BITSMANS
INSTITUTES
Manipay.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

BITSMANS
INSTITUTES
Manipay
G. C. E O/L
DAY CLASS
(முழுப்பகல்நேர வகுப்புக்கள்)
எமது வழமையான
"SUPER GRADE"
ஆசிரியகுழுவினால்
கற்பிக்கப்படுகின்றது
ஆரம்பம்: 25-3-87
புதன் 7-30 மணி
காலை 7-30 -- 1-30 வரை
நடைபெறும்

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 10 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 23 (24.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 100









யுத்தக் கைதிகள் நால்வர்

# யுத்தக் கைதிகளை விடுவிக்க புலிகளின் நிபந்தனை இதோ!

## போராளிகள், ஆதரவாளர் 25 பேர் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

திங்கள் அதிகாலை — அதுதான் 23 ஆம் திகதி அதிகாலை — தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் சாதித்த மற்றொரு சாதனையின்போது பிடிக்கப்பட்ட எட்டு யுத்தக் கைதிகளை விடுவிக்க புலிகள் விதிக்கவிருக்கும் நிபந்தனை இதுதான்:-

புலிகள் இயக்கப் போராளிகள், ஆதரவாளர்கள், உதவியாளர்கள் என்று 20 முதல் 25 வரையானோர் அரச படையினரால் - அரசாங்கத்தால் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர். அவர்களை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்தால் நாமும் யுத்தக் கைதிகளை விடுவிப்போம். இதுவே எமது இப்போதைய நிலை. ஆனால் இது மறுபரிசீலனையின் பின்னர் மாற்றப்படலாம்.

இவ்வாறு சரித்திரம் படைத்த சாதனைத் தாக்குதலுக்குத் தலைமை வகித்த யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு உதயனுக்கு அளித்த தகவலில் தெரிவித்தார்.

தமது பெரு வெற்றியை சாதாரணமானதாகக் காட்டிக்கொண்ட தளபதி கிட்டு உதயன் செய்தியாளரிடம் நேற்று இரவு சொன்னவை இவை; படியுங்கள்.

சில விடுதலைப் புலிகள் போராளிகளுடன் அவர்களின் நெருங்கிய ஆதரவாளர்கள் உதவியாளர்கள் என சுமார் 20 தொடக்கம் 25 பேர் சிறிலங்கா அரசின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களை விடுவித்தால் மட்டுமே நாம் யுத்தக் கைதிகளாகப் பிடித்திருக்கும் எட்டு சிறிலங்கா அரசபடையினரையும் நாம் விடுவிப்போம். இதுதான் எமது இப்போதைய நிலை.

எனினும் மற்றவர்களுடன் இதுகுறித்து ஆலோசித்துப் பரிசீலனை செய்தபின்னர் இதனை நாம் மாற்றியமைக்கக் கூடும்.



கிட்டு

பண்ணைப் பொலீஸ் விடுதி, இராணுவ முகாம் கோட்டை முகாமை அண்டியிருந்தபோதிலும் இது தனியான ஒரு மினி முகாம் போலவே செயற்பட்டு வந்தது.

### ஹெலிகளைத் தடுத்தோம்

கோட்டை முகாமிற்கு வந்திறங்கும் ஹெலிக்கொப்டர்களை நாம் அடிக்கடி தாக்கி வந்தோம். இதனால் மண்டைதீவு முகாமில் ஹெலிக்கொப்டர்களை இறக்கவேண்டிய நிலை அரச படையினருக்கு ஏற்பட்டது.

அப்படி மண்டதீவில் தரையிறங்கும் ஹெலிக்கொப்டர்களில் வரும் பொதிகளை கோட்டை

(4ஆம் பக்கம் பார்க்க)

### வரவேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நேற்றுக் காலை நகரில் விடுதலைப் புலிகள் வாகனங்களில் தங்களின் சிவப்புநிறக் கொடியைப் பிடித்தபடி வட்டமிட்டனர்.

இதைக் கண்ட மக்கள் ஆங்காங்கே கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றனர்.

இதனிடையில் நேற்று விடிந்தும் விடியாதது மாக மக்கள் நகரை நோக்கிப் படையெடுத்தனர்.

சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்களைப் பார்ப்பதற்காகவே அவர்கள் வந்தனர் பலர் புலிகளின் முகாம்களின் முன்னாலும் கூடி நின்றனர், எனினும் அவர்களால் சிப்பாய்களைப் பார்க்க முடியவில்லை.

(உ-10)

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம் மார்ச் 24

நேற்று அதிகாலை பண்ணை பொலீஸ் விடுதி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்.

- ★ ஆர். பி, ஜி-1
- ★ ஆர். பி. ஜி ஷெல்-1
- ★ ரி 56 ரகத் துப்பாக்கிகள்-12 ( ரி 56 ரக கிரனேட் லோஞ்சர்கள் 2 உட்பட)
- ★ ஏ. கே. ஜி பி எம். -1
- ★ றம் மகஸீன் -4
- ★ மேலதிக ரவைக்கூடுகள்-10
- ★ எஸ். எல் ஆர்-4
- ★ குண்டு துளைக்காத கவச அங்கிகள், ஹெல்மெட்டுகள், ஆயிரக்கணக்கான ரவைகள்.

(உ)

### 50 பேர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஞாயிறு நள்ளிரவு சிப்பாய்களினால் மேற்கொள்ளப்பட்ட மூர்க்கத்தனமான ஹெலித்தாக்குதலினாலும் ஷெல் தாக்குதலினாலும் சுமார் ஐம்பதுக்கு மேற் பட்டோர் காயமடைந்தனர்.

அவர்களில் 28 பேரின் பெயர் விவரங்கள் யாழ் ஆஸ்பத்திரியில் பதியப்பட்டுள்ளன

## யாழ் நகர் நேற்று வெறிச்சோடியது

### பாடசாலைகள், வங்கிகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 24

நேற்று அதிகாலைவரை இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து நேற்று யாழ் நகர் செயலிழந்தது நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன

சில கடை உரிமையாளர்கள் தமது விற்பனைப் பொருள்களை அப்புறப் படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

தமது பொருள்களை அப்புறப்படுத்த வோரினது வாகனங்களைத் தவிர வேறு வாகனங்களைக் காணமுடியவில்லை.

அதிகாலை பெருந் தொகையான பொது மக்கள் ஷெல் தாக்குதலின் சேதங்களை பார்வையிட வந்திருந்தனர்.

காலை 9 மணியளவில் இடம்பெற்ற ஒரு ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் உடன்

(4ஆம் பக்கம் பார்க்க)





யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி வருவதாக சொன்ன அரசாங்கத்துக்கு முகத்தில அறைஞ்ச மாதிரி எல்லே புலிகள் சாதனை புரிஞ்சிருக்கினம்!

## ★ மன உறுதிக்குக் கிடைத்த வெற்றி என்கிறது பி. பி. சி

லண்டன், மார்ச் 23

யாழ் குடாநாட்டில் கோட்டை முகாம்மீது ஆச்சரியப்படத்தக்க முறையில் துணிச்சலான தாக்குதலை நடத்தி, அரச படையினரை உயிருடன் சிறைப்பிடித்த, தமிழீழ விடுதலைப் புலிகளின் மன உறுதிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இப்படி பி. பி. சி. வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

யாழ் கோட்டை முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து பி பி சி யின் கொழும்புச் செய்தியாளர் திரு. ஜோன் ரெற்றி தெரிவித்ததாவது:-

யாழ் குடாநாட்டில் உள்ள முக்கியமான இராணுவ முகாம் கோட்டை முகாம் ஆகும்.

ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் துணிகரமாக முகாம்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் திங்கள் அதிகாலை தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலை புலிகள் கடலால் வந்து நடத்தினரா, தரை மார்க்கமாக வந்து நடத்தினரா என்பது இன்னும் தெரியவில்லை.

யாழ் குடாநாட்டில் புலிகள் அரசச் சிப்பாய்களை சிறைப்பிடித்தது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ● அண்ணாந்து பார்த்த மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நேற்றுப் பகல் யாழ் நகர வீதிகளில் நின்றவர்களும், சென்றவர்களும் அடிக்கடி வானத்தை அண்ணாந்து பார்த்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஹெலி, பொம்மர்கள் ஏதாவது சுற்றுகின்றனவா என்றே இவர்கள் அடிக்கடி அண்ணார்ந்து பார்த்தனர்

வாகனச் சாரதிகளும் வாகனத்துக்கு வெளியே தலையை நீட்டி அண்ணார்ந்து பார்ப்பதைக் காணமுடிந்தது (இ-எ)









மற்றைய 4 யுத்தக் கைதிகள்

### சுபநேரம்

24-03-1987
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10-46 முதல் 12-16 வரை
ராகுகாலம்:
3-16 முதல் 4-46 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 26 சிங்களவர் கொலை


திருகோணமலை, மார்ச் 24

சேருவில தேர்தல் தொகுதியிலுள்ள சேருநுவர கிராமத்தில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 26 சிங்களவர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலோர் ஊர்காவல் படையினர்.

வெகுஜனத் தொடர்பு நிலையம் நேற்று இதனை அறிவித்தது.

இத்தாக்குதலை நடத்தியவர்களைப் பிடிப்பதற்காக ஆயுதப் படைகள் அப்பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்துகின்றன என்றும் வெகுஜனத் தொடர்பு நிலையம் தெரிவித்தது. (இ-எ)



[புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களில் ஒருகுதி

## கோட்டைச் சம்பவம் குறித்து வெகுஜன தொடர்பு நிலையம் கூறுவது...

கொழும்பு, மார்ச் 24

யாழ் கோட்டை முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இன்னும் ஏழு சிப்பாய்களைக் காணவில்லை.

இப்படி கொழும்பு அரசின் வெகுஜனத் தொடர்பு நிலையம் நேற்று அறிவித்தது.

மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கு அருகிலும் கோட்டை முகாமுக்கு அருகிலும் அமைந்துள்ள இரண்டு காவல் நிலையங்களும் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் இந்தியாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள் என்றும்—

சமாதானம் வேண்டாம்; சண்டைதான் வேண்டும் என்று கோஷமிட்டார்கள் என்றும்—

வெகுஜனத் தொடர்பு நிலையம் மேலும் அறிவித்தது.

புலிகள் 82 மி.மீ. கலிபர் துப்பாக்கியைப் பாவித்துத் தாக்கினர் என்றும் அது மேலும் தெரிவித்தது. (இ-எ)

## ராணுவ விஸ்தரிப்புகளை தடுக்கவே தாக்குதல்

### பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஸ்ரீலங்கா அரச தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளும் இராணுவ விஸ்தரிப்புகளையும் தமிழர் மீது கொலைகளையும் கட்டுப்படுத்தவே யாழ் பொலிஸ் விடுதி இராணுவ முகாம் தாக்கப் பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



ஸ்ரீலங்கா அரசு முப்படைகளின் முழு முயற்சியுடன் தமிழ்ப் பிரதேசங்களை இராணுவ மயமாக்கவும், தமிழ்ப்பகுதிகளில் பொருளாதார தடைகளை அமுல் செய்து பட்டினிச்சாவை ஏற்படுத்தவும் முயன்று வருகிறது.

இதே நேரம் குடாநாட்டில் தோல்வியுற்று நகரமுடியாத இராணுவம் தன் இராணுவ முகாமின் எல்லையை விஸ்தரிப்பதை நோக்காகக் கொண்டு முகாமை அண்டிய பகுதிகளில் மினி முகாம்களை அமைத்து வருகிறது.

இவையனைத்தையும் முறியடிப் பதற்காகவே 23 ஆம் திகதி அதிகாலை 1.20 மணி அளவில் எம்மால் பொலீஸ் விடுதி முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டது.

இராணுவ முகாம் அரை மணி நேர உக்கிர மோதலின் பின் எமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது.

இதைத் தொடர்ந்து முகாமிலுள்ள இராணுவத்தினர் நேரடிச் சமரில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### நெல்லியடியில் ஊர்வலம்

உடுப்பிட்டி, மார்ச் 24

எரிபொருள் தடையையும், பொருளாதாரத் தடையையும் ஆட்சேபித்து நேற்றுக்காலை நெல்லியடியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

நெல்லியடியில் நேற்றுக்காலை 9-00 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முடிவுற்றது.

அங்கு அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பெருந்தொகையானோர், இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினர். (உ-157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

**தேவை**

யாழ் மாவட்ட தேர்தல் தொகுதி அடிப்படையில் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விளம்பரம் சேகரிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 28-3-87ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர எண் - 57, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**

யாழ் கிரேசன் சந்தியிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 677, அம்மான் கிரோசர்ஸ், கிரேசன் சந்தி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

Hyline (ஹைலைன்) வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் செலுத்தி 1 வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.

**காணவில்லை**

பே. பாலசுப்பிரமணியம் ஆகியவருடைய SH1431620V என்னும் இலக்கமுடைய அடையாள அட்டை தொலைந்து விட்டது. தயவு செய்து கண்டெடுப்பவர்கள் S குணலிங்கம் C/o பே. சுப்பிரமணியம், மணியம் கிறோசரிப்பாம் K G வெலிங்டன், ராஜ வீதி, கோப்பாயில் கொடுக்கவும் சன்மானம் வழங்கப்படும்


# காதல் மணம் செய்த இளம் மனைவியைக் கோரக்கொலை செய்த இளைஞன்

முள்ளியவளை, மார்ச் 24

தான் காதலித்துத் திருமணம் செய்த இளம் மனைவியைப் பெரியகத்தி ஒன்றினால் தலையில் வெட்டிக் கொடூரமாகக் கொலைசெய்தாராம் கணவர்.

தான் கேட்டபடி மனைவி பெற்றோரிடமிருந்து 40 ஆயிரம் ரூபாவைப் பெற்றுத்தரத் தவறியதற்காகவே இந்தத் தண்டனையைக் கணவன் வழங்கியதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கோரச் சம்பவம் முள்ளியவளைப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணுக்கு வயது 21.

பெற்றோரிடமிருந்து மனைவி பணம் கொண்டு வராததால் ஏமாற்றமடைந்த கணவன் பந்து (சிறுபற்றைகள்) வெட்டுவதற்காகத் தனியாக அழைத்துச் சென்றாரும்.

மனைவியைத் தனியான இடத்துக்குக் கூட்டிச் சென்ற கணவன், அங்கு மனைவியைக் கோரமாக வெட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. கே. தியாகராசா கொலை எனத் தீர்ப்பளித்தார்.

தலைமறைவாகியுள்ள கணவன் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைச் சம்பவம் முள்ளியவளையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (உ-93)

# மண் மீட்பில் அனைவரும் பங்காளர்களாக வேண்டும்

சாவகச்சேரி, மார்ச் 24

நாம் பார்வையாளர்களாக இராது மண் மீட்புப் போரில் பங்காளிகளாக மாற வேண்டும் போராளிகளுடன் மக்களும் இணைய வேண்டும். அப்போதுதான் எம்மண் மீட்புப் போரில் தியாகிகளின் இலட்சியம் நிறைவேறும்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் திரு சே. வாமதேவன் இவ்வாறு கூறினார்.

கைதடியில் வெடிவிபத்துக்காளான வீர வேங்கைகளின் 31ஆவது நாள் நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் உரையாற்றினார்.

பெருந்திரளான மக்கள் கூடி இருந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் சாவகச்சேரிப் பொறுப்பாளர் மேஜர் கேடில்ஸ் லெப்டினட் சேணல் பொன்னம்மான், வாசுசித்தாத்தன் முதலான பத்துப் பேர்களின் இழப்பும் ஈடுசெய்ய முடியாதது. அவர்கள் நினைவு என்றும் நெஞ்சைவிட்டகலாது அவர்கள் மரணிக்கவில்லை எங்கள் மனங்களில் வாழ்கின்றார்கள் என்றார்.

வயல்ஸ்ழுாத் தலைவர் டாக்டர் பே பிலிப், வர்த்தகர் சங்கப் பிரமுகர் சி. நவரத்தினம், இணக்கசபைத் தலைவர் திரு. எஸ் வெற்றிவேலு அதிபர் த. சுப்புத்துரை ஆசிரியர் திரு க இ சண்முகலிங்கம், திரு. எஸ். பி கணபதிப்பிள்ளை முதலானவர் உரை நிகழ்த்தினர். (இ-81)

# தராசுகள், படிகளுக்கு முத்திரையிட தயங்கும் வியாபாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

பல வியாபாரிகள் தமது தராசுகளுக்கு முத்திரை இடுவதில்லை.

இன்றைய சமரால பிரச்சினைகளை சாட்டாக வைத்து நிறை குறைந்த பொருள்களை விற்பனை செய்கிறார்கள்.

உள்நாட்டு வர்த்தக திணைக்கள நிறுவை அளவும் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு ஒரு தடவையாவது வியாபாரிகள் தமது தராசுக்கும் படிகளுக்கும் முத்திரையிட வேண்டும்.

கடந்த 3 வருடங்களாக பல வியாபாரிகள் தமது தராசுப் படிகளுக்கு முத்திரையிடவில்லை.

யாழ் நிறுவை அளவுப் பிரிவிடம் இருந்த வாகனம் ஒன்றும் இப்போது சேட்டையில் உள்ளது.

இதனால், திடீர் பரிசோதனைகள் நடத்துவதிலும் சிரமங்கள் இருந்து வருகின்றன

அப்படிப் பரிசோதனைகளில் பிடிபட்ட வியாபாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யவும் முடியாதுள்ளது

எந்த ஒரு வியாபாரியும் நீதி மன்றம் வருவதில்லை.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ- )

## பிரேமா பாக் விஜயம்

கொழும்பு, மார்ச் 24

பாகிஸ்தான் உட்பட மூன்று நாடுகளுக்கான திடீர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் பிரேமதாஸ இன்று கொழும்பில் இருந்து புறப்படுகின்றார்.

முதலில் பாகிஸ்தான் செல்லும் பிரதமர் பிரேமதாஸ, ஜனாதிபதி ஸியா-உல்-ஹக், பிரதமர் முகமட் ஜுனைஜோ ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவார்.

பின்னர் எகிப்து செல்வார் அங்கு அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்

பின்னர் அவர் கென்யாவுக்குச் செல்வார். (உ-எ)

## முல்லைத்தீவில் புதிய சென்றி

முள்ளியவளை, மார்ச் 24

முல்லைத்தீவு முன்றும் சந்தைக்கருகில் உள்ள பூவரச மரத்துக்குச் சமீபமாக ஆயுதப்படையினர் புதிதாக 'சென்றி' ஒன்றை அமைத்து உள்ளனர்.

மண் மூடைகளை அடுக்கி இச் சென்றி அமைக்கப் பட்டது

இதன்காரணமாகசினாவத்தை ஊடாக முல்லைத் தீவு செல்லும் பொது மக்கள் அச்சத்துடன் பயணஞ் செய்கின்றனர். (உ-எ-93)

## நுணாவிலிலும் ஹெலி வேட்டு

சாவகச்சேரி, மார்ச் 24

சனிக்கிழமை மாலை நாவற்குழிப் பகுதியில் வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்த இரண்டு ஹெலிகளும் மாலை சுமார் மூன்றரை மணியளவில் மட்டுவில், நுணாவில், கல்வயல் பகுதிகளில் வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தன.

பெரும் பதற்றநிலை உருவானது யவர் பதுங்கு குழிகளில் சரண் புகுந்தனர் பலத்த சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (உ-31)

# ஆசிரியர் மன நிலை மாற வேண்டும்

## என்கிறார் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி மார்ச் 24

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் பல மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கவே விரும்புகின்றனர். ஆனால் இந்த விருப்பம் மாணவர்களின் நன்மை கருதி அல்ல கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றும் போதும் ஆனையிறவுக்கு வடக்கே நிற்கவே பலரும் விரும்புகிறார்கள் இந்த நிலை ஆசிரியர் மனதை விட்டு மாறவேண்டும்.

பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பளை மகாவித்தியாலயத்தில் பளை மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. ஏ. பி. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பொது மக்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வைபவத்தில் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்துரையாற்றுகையில்:-

கிளிநொச்சி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் எனக் கூறுவது மாணவர்களுக்கு ஒரு விதத்தில் சாதகமாகவுள்ளது ஆனால் ஆசிரியர்களுக்கோ அப்படி அல்ல.

ஆகவே ஆசிரியர்களாகப் புறப்பட்ட நாம் மாணவ உலகுக்கு துரோகம் விளைவிக்க நினைக்கக்கூடாது.

ஆசிரியர்கள் எங்கேயாவது சரி முழு மனதுடன் சேவையாற்ற வேண்டும். அது வே எமது பிற்கால சந்ததியினரைக் கல்விமான்களாக்க வழி வகுக்கும் என்றார். (இ-76)


# அரச படையினர் கூறும் வாழ்த்துக்கள்!

முள்ளியவளை, மார்ச் 24

ஆனையிறவு தடை முகாமைத் தாண்டும் பயணிகளிடம் ஆயுதப்படையினர் துண்டுப் பிரசுரங்களை வழங்குகின்றனர்.

'வாழ்த்துக்கள்' என்ற தலைப்பிலான இத்துண்டுப்பிரசுரத்தின் முடிவில் 'உங்கள் பயணம் நல்ல பயணமாகுக என்று எதிர்பார்க்கின்றோம்'— என்று கூறி முடிக்கப்பட்டுள்ளது

'பெட்டிகளைப் பரிசோதிக்கும்போது உங்களுக்கு அசௌகரியம் என்பதை நாம் அறிவோம் அதே சமயம் நாம் ஏன் இப்படிப் பரிசோதிக்கிறோம் என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம்; அநியாயமாக ஏற்படும் உயிரிழப்பு சேதங்களைத் தடுக்கவே நாம் எமது பணியைப் புரிகிறோம்'—

—இப்படி துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ-93)


# போஷாக்கு உணவு வழங்கும் நிலையங்கள்

அனலைதீவு, மார்ச் 24

ஒன்றிணைந்த சேவைகள் நிறுவனம் பல பின்தங்கிய கிராமங்களின் வறுமைக்கோட்டின் கீழ் போஷாக்கின்றி வாழும் குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் போஷாக்கு உணவை வழங்கும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது

இந்நிறுவனத்தின் தலைமையின் கீழ் நடந்த கூட்டத்தில் பங்கு பற்றிய நிவாரண சேவை சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர் கூடிய விரைவில் யாழ் பகுதியில் 45 நிலையங்களை நடத்தப் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இது விடயமாக அவ்வப்பகுதி சுகாதாரவைத்திய அதிகாரியின் அபிப்பிராயம் கோரப்பட்டு புதிய சத்துணவு நிலையங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சொறி சிரங்கால் பாதிப்புற்ற மேற்படி நிலைச் சிறுவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் வைத்திய சேவையும் நடத்தப்படவுள்ளது. (இ-ரி)

## ஊர்காவல் படையினர் அட்டகாசம்

மட்டக்களப்பு, மார்ச் 24

அட்டாளைச்சேனைப் பகுதியிலுள்ள முஸ்லிம் கிராமம் ஒன்றில் ஊர்காவல் படையினரின் அட்டகாசம் அதிகரிப்பது குறித்து அக்கறைப்பற்று கல்முனை பிரசைகள் குழுக்கள் மாவட்ட இணைப்பதிகாரி, பொலீஸ் அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

ஊர்காவல் படையினர் திட்டமிட்ட கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இக் குழுக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-21)

# நடமாடும் பல் சிகிச்சை நிலையம் இயங்குவதில் சிரமம்

மானிப்பாய், மார்ச் 24

தற்போதுள்ள சூழ்நிலையில் நடமாடும் பல் சிகிச்சை நிலையம் நடத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது ஆகையினால் நிரந்தரமாக பல் சிகிச்சை நிலையங்கள் உள்ள பாடசாலைகளுக்கு பாடசாலை மாணவர்களை அழைத்துச் சென்று பல்சிகிச்சை அளியுங்கள்.

யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் - நல்லூர், சாவகச்சேரி, மானிப்பாய், வேலணை, புங்குடுதீவு, கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

பாடசாலைப் பல் சிகிச்சைகளைப் பின்வரும்பாடசாலைகளில் பெறமுடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்:

அவையாவன:-

வேம்படி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் (இ-90)

# தமிழர் தாயகத்தை நிருபிக்கும் இலக்கியச் சான்றுகள்

## வெளியீட்டு விழாவில் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் தமிழ் மக்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டுக்கு சமத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் நிறைவச் சான்றுகள் உள்ளன

கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் 'பாதை மாறிய போது' என்ற குறுங்காவிய வெளியீட்டு விழாவில் அறிமுகவுரை நிகழ்த்திய கலாநிதி க. நா. சுப்பிரமணியன் இவ்வாறு குறிப்பிட்டார்

யாழ் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு செம்பியன் செல்வன் தலைமை வகித்தார் முதற் பிரதியினைப் முன்னாள் பத்திரிகையாளர் திரு. இ. சங்கர் பெற்றார் கலாநிதி சுப்பிரமணியன் தொடர்ந்து கூறியதாவது:-

நமது ஈழத்துத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தைக் குறிப்பாக கவிதைப் பாரம்பரியத்தை நாடினால், எமது தாயக நிலைப்பாட்டுக்கு மறுக்க முடியாத சான்றுகளைப் பெறலாம்.

திருக்கோணசல மகிமை, கோணசல மான்மியம், அப்பகுதியில் உள்ள கல்வெட்டுகள், தந்தைவிடு தூது போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.

ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

'சமூக, அரசியல், கல்விச் சூழல் ஆகியவற்றின் தாக்கம் காரணமாக ஓர் இளைஞன் பாதை மாறிப் போகிறான்; இலட்சியவாதி ஆகிறான்; போராளி ஆக முடிவு செய்கிறான்; பாசறை நோக்கி அடி எடுத்து வைக்கிறான்.

"இவைபற்றிக் குறுங்காவியம் படைத்தமையால் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை சமகாலப் பிரச்சினையைத் தனது கருவாக்கி உள்ளார்.

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு சோ. பத்மநாதன் தமது பேச்சில் பின்வருமாறு கூறினார்:-

எரியும் பிரச்சினையைக் கருவாக்கி மண்வாசனை வீசத் தாம் படைத்த குறுங்காவியத்தைக் கவிதை, மரபு வழுவாமல் காரை சுந்தரம்பிள்ளை நமக்குத் தந்துள்ளார். எந்தப் பொருளையும் கவிதை மரபு வழுவாமல் படைக்கலாம் என்பதற்கு இது நல்ல சான்று."

-இப்படி திரு. பத்மநாதன் கூறினார்.

பதிலுரை கூறிய கவிஞர், காரை சுந்தரம் பிள்ளை-

"நான் அன்றாடம் வாழ்வில் சந்திக்கின்ற என து மாணவர்கள் எழுப்பிய பெருமூச்சு, அவர்கள் மனப்போராட்டம்- ஆகியவையே இக் குறுங்காவியத்துக்குக் கருவாக அமைந்தன என்றார். (உ-9)

## ஆகாயரோந்து அதிகரிப்பு

முள்ளியவளை, மார்ச் 24

கடந்த சில தினங்களாக ஆகாய ரோந்து நடவடிக்கைகள் முல்லைத் தீவுப் பகுதியில் அதிகரித்துள்ளன

இரண்டு ஹெலிக் கொப்டர்களும் ஒரு சீபிளேனும் முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத் தீவுப்பகுதிகளை உள்ளடக்கி வேவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் பொது மக்கள் மத்தியில் பீதி நிலவுகின்றது. (உ-எ-93)

## புதைந்த வாகனத்தை மீட்கவும் சுற்றிவளைப்பு

முள்ளியவளை, மார்ச் 24

சேற்றில் புதையுண்ட கவசவாகனத்தை மீட்டு எடுக்கவும் ஆயுதப்படையினர் சுற்றிவளைப்பு நடத்தினர்

கடந்த திங்கட்கிழமை முதல் முல்லைத்தீவு இராணுவ முகாமில் விமான ஓடுபாதை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாதையை அமைப்பதற்கு தேவையான தார்ப்பீப்பாக்களை பெருந்தொகையில் ஏற்றிச்சென்ற ஒரு கவசவாகனம், வயலில் புதையுண்டது.

இந்தக் கவச வாகனத்தை மீட்டெடுப்பதற்காக சுமார் 800 சிப்பாய்கள் கவசவாகனங்கள் சகிதம் கள்ளப்பாடு, சிலாவத்தை பகுதிகளை சுற்றிவளைத்துக் காவலில் ஈடுபட்டனர்.

புதையுண்ட கவசவாகனத்தை மீட்டெடுக்க 8 மணித்தியாலங்களுக்கு மேல் சென்றது

இச் சுற்றிவளைப்பு பொதுமக்களைப் பீதியடையச் செய்தது ஆனால் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. (உ-எ-93)



# இல்ல விளையாட்டு போட்டி முடிவுகள்

## பண்டாரவன்னியன்

நெடுங்கேணி, மார்ச் 24

நெடுங்கேணி மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. க. தம்பு தலைமையில் நடைபெற்றது

390 புள்ளிகள் எடுத்து பண்டாரவன்னியன் முதலாம் இடத்தையும், 310 புள்ளிகளை எடுத்து கைலை வன்னியன் இரண்டாம் இடத்தையும் 315 புள்ளிகளை எடுத்து மாப்பாண வன்னியன் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (இ-108)

## கந்தையா இல்லம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் 538½ புள்ளிகளைப் பெற்ற கந்தையா இல்லம் முதலாமிடத்தைத் தனதாக்கியது

இளையதம்பி இல்லம் 488½ புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பெற்றது (இ-7)

## முதலியார் இல்லம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நவாலி மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

அதிக புள்ளிகளைப் பெற்று முதலியார் இல்லம் (பச்சை) முதல் இடத்தையும் பண்டிதர் இல்லம் (நீலம்) இரண்டாம் இடத்தையும் புலவர் இல்லம் (மஞ்சள்) மூன்றும் இடத்தையும் பெற்றன (இ)

## பாரதி இல்லம்

காரைநகர், மார்ச் 24

யாழ் காரைநகர் ஆ தியாகராஜ மத்திய மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

பாரதி இல்லம் முதலாவது இடத்தையும், காந்தி இல்லம் இரண்டாவது இடத்தையும், சயம்பு இல்லம் மூன்றாவது இடத்தையும் நடராஜா இல்லம் நான்காவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. (இ-ரி)

# அவலங்களை அறுக்க இறைவழிபாடே வழி

## கூட்டு வழிபாட்டுக் கூட்டத்தில் உரை

மானிப்பாய், மார்ச் 24

உலகத்தில் கஷ்டங்களும் சோதனைகளும் இல்லாமல் எவரும் வாழ முடியாது பக்தர்களும் அவதார புருஷர்களும் கூட எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் தான் வாழ்ந்திருக்கிறார்கள் அக்கஷ்டங்கள் இறைவனின் அருளையும் பெருமையையும் மேலும் மேலும் உணரவைத்தன.

எனவே நாமும் இன்றைய துன்பங்களைக் கண்டு துவண்டு போகாமல், அவதார புருஷர்கள் காட்டிய மார்க்கத்தில் பிரார்த்தனைகள் செய்வதன்மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்க முயல்வோம்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அவதார தினத்தையொட்டி நவாலியில் நடைபெற்ற கூட்டு வழிபாட்டுக் கூட்டத்தில் பேசிய நவாலியூர் நடேசன் இவ்வாறு கூறினார்.

நவாலி அருள்மொழி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் திரு. சி பி. செல்லையா பேசுகையில் இன்று நம்மை எதிர் நோக்கியுள்ள அவலங்கள் தீர இறைவழிபாடே முக்கியமானது தூய மனதோடு வழிபடுவோரின் கோரிக்கைகளுக்கு இறைவன் நிச்சயம் செவிமடுப்பார் என கூறினார்.

நமது நாட்டின் அமைதிக்காக தினமும் இரவு 9 மணிக்கு இரு நிமிடம் மக்கள் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் என வல்வெட்டித்துறைப் பிரசைகள் குழு விடுத்த வேண்டுகோளை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் வ. சிவாஜியும் கூட்டத்தில் உரையாற்றினார் (உ-90)

## மேலும் 75 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் சுமார் 75 பேர் பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். (இ-81)


★ வெளிவந்து விட்டான்

**அர்ச்சுனா**

மார்ச் மாத இதழ் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

கிரிக்கெட் பிரியர்களுக்கோர் இனிப்பான செய்தி!

பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவுக்கான கப்பல்கள் இரண்டு அர்ச்சுனாவில் வெளிவந்துள்ளன.

இன்னும்

★ துணுக்குக் குவியல்
★ அறிவுலக அறிமுகம்
★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரைகள்
★ எண் ஜாலம்
★ கணிதப் புதிர்

போன்ற பல அம்சங்களுடன் சாரணியச் சிறப்பு மலராக வெளிவந்துள்ளது

★ ★ ★

இன்றே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தனிப்பிரதி ரூபா 3/- மட்டுமே.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தவறுன வழியில் செல்லும் மனிதனை சரியான வழியில் இறைவன் நடத்திச் செல்கின்றன்.

— அரவிந்தர்


# உதயன்

இல, 15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 24-03-1987 உ.செ. இல 88


## புலிகளின் சவால்!

டிசம்பர் 19 யோசனையின் பின்னர் ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கைகளைப் படிப்படியாக அதிகரித்து வந்தது.

அரசியல் தீர்வு என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டு மறுபுறம் தனது படைப்பலத்தைக் குவித்துத் தமிழ்ப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி வந்தது.

இதில் இறந்தவர்களில் அனேகமாக முழுப் பேரும் அப்பாவிப் பொதுமக்களே.

பொதுமக்கள் உயிரிழக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்ற நாமம் சூட்டப்பட்டது.

அரசின் வெகுசன தொடர்புச் சாதனங்களும் ஊதுகுழல்களான கொழும்பு ஆங்கில-சிங்கள நாளிதழ்கள் சிலவும் இந்த பொய்ப் பிரசாரங்களுக்கு பக்க பலமாக இருந்து வருகின்றன.

கிளிநொச்சி - பரந்தன் தாக்குதல்களின் பின்பும்-

தொண்டமானாறு, பலாலிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சில இராணுவ விஸ்தரிப்பு முயற்சிகளின் பின்பும் -

வடக்கு-கிழக்கின் பெரும் பகுதி தனது கட்டுப்பாட்டிலேயே என்று ஸ்ரீ லங்கா அரசு தம்பட்டம் அடித்து வந்தது.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் தனது கையை ஓங்கப்பண்ணும் தீவிர முயற்சியில் அரசு ஈடுபட்டு வந்தது எரிபொருள் விநியோகம் என்ற சாட்டில் தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நிர்வாகத்தையும் திணிக்க முயன்றது.

இப்படியான நிலையிலேயே நேற்று அதிகாலை வன்னியில் உள்ள பொலிஸ் விடுதி மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகப் பெரும் தாக்குதலை நடத்தி உள்ளனர். சிங்களத்தின் குகை வாசலுக்கே சென்று இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது ஸ்ரீலங்கா அரச நிர்வாகத்துக்குப் பெரும் சவால் ஆகும்.

இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் புலிகளால் உயிருடன் பிடிக்கப்பட்டனர். பலர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்தனர். பெரும் தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

அடம்பனில் இரு சிப்பாய்களை உயிருடன் சிறைப்பிடித்துப் பல சிப்பாய்களைச் சுட்டுக் கொன்று காட்சிக்கு வைத்தும் வீர வரலாறு படைத்தவர்கள் புலிகள்.

நேற்றைய அதிகாலைத் தாக்குதல் மூலம் மற்றொரு வரலாறு படைத்துவிட்டனர்.

சமீபத்திய நடந்தசம்பவங்களின் பின்னர் புலிகளால் தாக்குப் பிடிக்க முடியுமா? என்ற கேள்வி உருவாகி வந்த சமயம் நேற்று அதிகாலை நடந்த தாக்குதல் மக்கள் மத்தியில் புதிய தெம்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் மூலம் போராளிகள் தற்பாதுகாப்பு நிலையில் இருந்து தாக்குதல் நிலைக்கு முன்னேறி உள்ளனர்.

நேற்றைய சம்பவத்தை அடுத்து ஸ்ரீலங்கா அரசபடைகள் கண்மூடித்தனமாக நடத்திய ஷெல் தாக்குதல்களால் பல வீடுகள் சேதம் அடைந்தன. பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர் நூற்றுக்கணக்கான மக்கள் கும்பிருக்கிடிப்பாதுகாப்பான இடங்களைநோக்கி இடம் பெயர்ந்தனர் உள்நாட்டு யுத்தத்தினுல் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் லெபனனில் கூட இப்படியான நிலைமை ஏற்பட்டதில்லை.

வெளி உலகுக்கு சம்பவங்களை மூடிமறைப்பதற்காக தொலைத்தொடர்புச் சாதனங்களையும் துண்டித்துவிட்டு அரசு நடத்தும் காட்டுமிராண்டித் தனம் இதுவாகும்.

விடுதலைப் போராட்டங்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

ஆனல் இங்கு நடைபெறும் அரச அட்டூழியங்கள் போன்று வேறு எந்த நாட்டிலும் நடந்ததில்லை. நடப்பதும் இல்லை.

மத்தியஸ்த முயற்சி மூலம் இலங்கை இனப்பிரச்சினையில் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொண்ட இந்தியா இரு தரப்பும் ஏற்கக்கூடிய நிலையில் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகச் சாவதை நிறுத்த உதவ வேண்டும்.

## அராலி தாம்போதி விஸ்தரிப்புக் குறித்து உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அராலி வேலணை தாம்போதி மேலும் விஸ்தரிக்கப்பட உள்ளதாக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. க. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்ற வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து அராலிப்பக்கத்தில் 200 அடியும் வேலணைப் பக்கத்திலிருந்து 100 அடியுமாக தாம்போதி விஸ்தரிக்கப்பட்டது.

இவ் வருடம் தாம்போதி அராலிப்பக்கத்திலிருந்து 300 அடி விஸ்தரிக்கப்பட உள்ளது.

தாம்போதி விஸ்தரிப்பு வேலைக்கு திவக அபிவிருத்திக் கழகம் சென்ற வருடம் 1840 வெற்றுச் சாக்குகளைச் சேகரித்துக் கொடுத்திருந்தது.

இவ்வருடம் மேலும் 8 500 வெற்றுச் சாக்குகளை அது தந்துதவவுள்ளது என்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-ள)

## இத்தாலியில் புதிய அரசுக்கு மேலும் முயற்சி

ரோம், மார்ச் 23

இத்தாலியின் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்குத் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனுதிபதியினுல் காபந்து பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள அந்திரியோட்டி ஏனைய கட்சித் தலைவர்களைச் சந்தித்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதுபற்றி ஆராய்ந்து வருகின்ருர்.

சோஷலிசக் கட்சித் தலைவர் கிராக்ஸி தலைமையிலான ஐந்து கட்சிக் கூட்டணி பிளவு பட்டதைத் தொடர்ந்து முன்னைய அரசாங்கம் ராஜினுமாச் செய்திருந்தது. (ஒ)

## இந்தோனேஷியா மாணவர் கோரிக்கை

ஜகார்த்தா, மார்ச் 23

இந்தோனேஷியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களில் இராணுவத்தினர் நடுநிலைமை வகிக்க வேண்டும்

இவ்வாறு இந்தோனேஷியா மாணவர் இயக்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது:

பொதுத் தேர்தலில் இராணுவத்தினர் வாக்களிக்க மாட்டார்கள். எனவே இவர்கள் ஆதரவாகவோ எதிராகவோ செயல்படாமல் நடுநிலைமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தேர்தல் பிரசார வேலைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றன (ஒ)

# வளைகுடாவில் அமெரிக்காவின் படை பலம்?

## கப்பல் போக்குவரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை

வாஷிங்டன், மார்ச் 23

வளைகுடாவில் சர்வதேச கப்பல் போக்குவரத்தைப் பாதுகாக்க அவசியமானுல் அமெரிக்கா தனது படைபலத்தைப் பயன்படுத்தும்.

இவ்வாறு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கெஸ்பர் வைன் பேபர் எச்சரித்தார்,

போர் முக்கியத்துவம் வாய்ந்த நீர்வழி நெடுகிலும் புதிய ஏவுகணைகளை ஈரான் நிறுத்தி விருப்பதைத்தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடப்பட்டது.

சமீபத்தில் சீனுவிடமிருந்து வாங்கிய ஏவுகணைகள் வளைகுடாவில் கப்பல் போக்குவரத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் என்ற குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது. (ஒ)

## சீனுவில் சுரங்க ரயில்

பீகிங், மார்ச் 23

சீனுவின் பிரதான நகரங்களில் ஒன்றுன ஷங்காயில் நிலத்திற்கு அடியிலான ரயில்சேவைகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுரங்க ரயில்பாதைக்கு சுமார் 75 கோடி அமெரிக்க டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

**வெளி உலகில்**

## சீனு-போர்த்துக்கல் அடுத்தவாரம் ஒப்பந்தம்

பீகிங், மார்ச் 23

மாக்கரவோத் தீவுகளால் நிர்வாகத்தை போர்த்துக்கல் சீனுவிடம் ஒப்படைப்பது சம்பந்தமாக அடுத்த வாரம் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளது.

அண்மைக் காலமாக போர்த்துக்கலுக்கும் சீனுவிற்குமிடையே இந்த ஆட்சி மாற்றம் தொடர்பாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் இப்பொழுது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

மாக்கரவோ பிராந்தியத்தின் எதிர்கால நிர்வாகம் குறித்து இரு நாடுகளும் பொதுவான இணக்கம் கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

## நீதிமன்றில் ஆஜர்

சிங்கப்பூர், மார்ச் 23

சிங்கப்பூரிலுள்ள கிறிஸ்தவ மதப்பிரிவு ஒன்றைச் சேர்ந்த 24 உறுப்பினர்கள் சட்ட விரோதமாக கூட்டம் நடத்திய குற்றச்சாட்டின் பெயரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

உல்லாசப் பயணிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடமொன்றில் அனுமதியின்றி இவர்கள் கூட்டம் நடத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. (ஒ)

## அமெரிக்க கருத்துக்கு அக்கினே கண்டனம்

மணிலா, மார்ச் 23

பிலிப்பீன்ஸ் அரசாங்கத்தின் பலவீனம் குறித்து அமெரிக்கா அண்மையில் கருத்து வெளியிட்டதை ஜனுதிபதி அக்கினே கண்டித்துள்ளார்.

பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும் ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்று அமெரிக்காவின் 'பெண்டகன்' பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனைக் கண்டித்த ஜனுதிபதி அக்கினே எந்தவொரு நாட்டைச் சேர்ந்த அதிகாரியும் மற்றுமொரு நாட்டின் அரசாங்கம் பற்றி இவ்விதமான கருத்துக்களை வெளியிடக்கூடாது என்றும் அமெரிக்க அதிகாரி வெளியிட்ட கருத்து தவருன தகவல்களை ஆதாரமாகக் கொண்டவை எனவும் தெரிவித்தார்.

பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ கிளர்ச்சி தொடர்பாக தாம் விரிவான திட்டமொன்றை அமுல் செய்து வருவதாகவும் கிளர்ச்சியாளர்களிடம் சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்துவதும் சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்தத்திட்டத்தில் அடங்கும்.

கம்யூனிஸ பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை மட்டும் நம்பிக் கொண்டிருப்பது தனது நோக்கமல்ல என அக்கினே மேலும் தெரிவித்தார். (ஒ)

## பிரிட்டிஷ் ராணுவ நவீன மயம்

## நாடாளுமன்ற அனுமதியின்றி அங்கீகரித்தது தவருனது!

லண்டன், மார்ச் 23

பிரிட்டிஷ் அரசாங்கம் 'ரோமிடோ' ராணுவ அமைப்புக்கான வசதிகளை நவீனமயப்படுத்தும் திட்டமொன்றினை நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி அங்கீகரித்துள்ளது தவருகும்.

'ரோமிடோ' ஸ்தாபனத்தின் விரிவான நவீனமயத்திட்டத்திற்கு அமைய அணு ஆயுத பாதுகாப்பு அமைப்புக்களை முன்னேற்றுவதற்கான திட்டமொன்று 1983 ஆம் ஆண்டு அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்பட்டது என்றும் வட இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றைச் சேர்ந்த ஆய்வாளர் டானியல் பிளே தெரிவித்துள்ளார்.

நவீன ஏவுகணைகள் புதுவகையான பீரங்கிக் குண்டுகள் அதி நவீன போர் விமானங்கள் முதலியவற்றைப் பெறுவதற்கு இத் திட்டத்தில் வழிசெய்யப்பட்டுள்ளது இத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல் அங்கீகரித்தமை திருமதி மார்கிரட்தட்சரின் அரசாங்கம் விட்ட ஒரு தவருகும் என்று சகல எதிர்க் கட்சிகளும் குற்றம் சாட்டியுள்ளன. (ஒ)

## பகத்சிங் நினைவு தினம்

இந்திய விடுதலை வீரர் பகத்சிங் 1931 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி தூக்கிலிடப்பட்ட நினைவு தினம் இன்று இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

# மொழிப்பிரச்சினை வரின் அதற்கு முடிவே இராது

## 1948 இல் செல்வா சொன்னுர்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமைச்சர் தொண்டமான் இப்போது நிலை தடுமாறத் தொடங்கியிருக்கிருர்.

ஆனுல் இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு,—1948 டிசம்பரில்—இந்தியத் தமிழர்களின் பிரசாவுரிமை, அநியாயமான சட்டத்தின்மூலம் பறிக்கப்பட்ட போது தந்தை செல்வநாயகம் மிகத் தெளிவுடன் இருந்தார் அவ்வேளையில்—அச்சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சமயம்—தீர்க்கதரிசனத்துடன் தந்தை செல்வநாயகம் உரைத்த வாசகங்கள் இங்கு ஈண்டு குறிப்பிடப் படுகிறது,

இவ்வுரை அமைச்சர் தொண்டமானுக்குச் சமர்ப்பணம்!

தனித்தன்மை, ஒருமைப்பாடு, கலாசாரம் ஆகியவற்றை நிலைநாட்டிக் கொண்டு ஏனையோருக்கு கஷ்டம் விளைவிக்காமல் வாழும் உரிமை ஒவ்வொரு சமூகத்துக்கும் சிறப்பாக சிறுபான்மைச் சமூகத்துக்கு உண்டு.

சிறுபான்மை மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளை நீங்கள் பரிசீலிக்கும்போது, அவர்கள் மற்றவர்களின் உரிமைகளை ஆக்கிரமிக்கவில்லை என்பதை அறிந்து கொள்வீர்கள்.

மற்றவர்களிலும் பார்க்க மேலதிக உரிமைகளை அவர்கள் கோரவில்லை. அவர்கள் என்ன சொல்கிருர்கள்?

'எமக்கு ஒரு மொழி, மதம், கலாசாரம், நாகரிகம் உண்டு அச்சலுகைகளை நிலைநாட்டவே நாம் விரும்புகிருேம்'—இதுவே அவர்கள் கூறுவது.

'இந்த நிலைநாட்ட எம்மை அனுமதியுங்கள்'— இதுவே அவர்கள் கோருவது

'இவைகளை அனுமதித்தவுடன் நாம் நாட்டின் மக்களுடன் இணைந்து வாழ விரும்புகிருேம்'— அவர்கள் இப்படி மேலும் கூறுகின்றனர்.

இது நீதியான, நியாயமான வேண்டுகோள் என்று நான் கூறுகின்றேன்.

### பல இனங்கள் வாழும் நாடுகள்

பல இனங்கள் வாழும் நாடுகளில் இப்படியான கோரிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தான் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

ஆனுல் அந்தக் கோரிக்கைகள் இங்கு நிராகரிக்கப்பட்டுள்ளன

இது மிக அநீதியான செயல். இந்திய சமூகத்துக்கு மட்டுமல்ல, சகல சிறுபான்மைச் சமூகங்களுக்கும் செய்யப்பட்ட அநீதியான செயல் என்று நான் கூறுகின்றேன்.

போர்த்துக்கீசர், ஆங்கிலேய இனங்களின் வழித்தோன்றல்களை கெளரவ பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா இங்கு ஒப்பிட்டுப் பேசினுர்.

ஏனையோருக்கு மனவேதனை கொடுக்காமல் ஒன்றை இங்கு கூறவிரும்புகின்றேன்.

இச்சமூகங்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை ஏனையோருக்கு அரசியல் ரீதியில் எதிர்காலநெருக்கடிகளைக் கொடுக்காது.

அப்படி அரசியல் ரீதியில் நெருக்கடிகளைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய சமூகங்களாகத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம் ஆகியோர்தான் உள்ளனர்.

கெளரவ பிரதமர் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம் ஆகியோரைத்தான் தாக்க விரும்புகின்ருர்.

இலங்கைத் தமிழராக [illegible] நோடியாகத் தாக்க [illegible] பிரசா உரிமைச் சட்டத்தை அடுத்து மொழிப் பிரச்சினை எழும். அப்போதுதான் நாம் எங்கே நிற்போம் என்பது தெரியவரும்.

ஒருவேளை அது முடிவாக இருக்காது.

எப்படி இருப்பினும் இச்சட்டமூலம், இனங்களுக்கு இடையேயான கஷ்டங்கள், கருத்து வேறுபாடுகளை தீர்க்கக் கூடிய உயர்ந்த லட்சியங்களின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை. அந்தக் காரணத்துக்காக முதலில் இந்தச் சட்ட மூலத்தை நான் எதிர்க்கின்றேன். ✶

## பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

சரவணை வெளிவாரிப் பிரிவில் சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையின் ஓராண்டுப் பூர்த்தி சமீபத்தில் கொண்டாடப்பட்டது. (இ-7)

## தொண்டமானுறு வெளிக்கள நிலையம் அச்சுவேலியிலே இயங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தொண்டமானுறு கல்வி வெளிக்கள நிலையத்தை நெல்லியடிக்கு இடம்மாற்றம் செய்வதற்கு எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. அது தொடர்ந்து அச்சுவேலியிலேயே இயங்கும்.

தொண்டமானுறு கல்வி வெளிக்கள நிலையம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதினுல் அது அச்சுவேலி பகுதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் செயற்பட்டு வருகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான கணிதஅறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சித் திறனுக்கும் ஏற்ற வசதிகளை செய்து வருவதுடன், வளர்ந்தோர் கல்வி மற்றும் பொதுவான ஆராய்ச்சிச் செயற்திட்டங்களை [illegible] கொண்டு வருகின்றது.

இந்த நிலையத்தைத் தற்போதைய நிலையில் கோப்பாய்த் தொகுதியில் இருந்து வடமராட்சி பகுதியில் நெல்லியடிக்கு இடம்மாற்றம் செய்ய எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

அண்மையில் அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற வெளிக்கள நிலையத்தின் நிர்வாகிகளின் பொதுக்கூட்டத்தில் நிலையத்தை இடம் மாற்றம் செய்வது தொடர்பான ஆலோசனை குறித்து காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

அங்கு நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் வெளிக்கள நிலையம் அச்சுவேலிப் பகுதியில் இயங்கலாம் என்பதற்கு ஆதரவாக 19 வாக்குகளும் நெல்லியடிக்குஇடமாற்றம் செய்ய வேண்டும் என்பதற்கு ஆதரவாக 9 வாக்குகளும் கிடைத்தன. (உ-11)

**பொய்யாமொழி**



குறள்:

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்.

பொருள்:

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும்; கேட்ட அந்த அளவிற்கு நிறைந்த பெருமையைத் தரும்

இலங்கையின்

# ஒற்றுமை, ஸ்திரத்தை நிலைநாட்டும் பொறுப்பு இந்தியாவிடம் இல்லை

இலங்கையின் ஒற்றுமையையும் ஸ்திரத்தையும்பாதுகாக்கும் பொறுப்பு இந்தியாவினுடையது அல்ல; அப்பொறுப்பு இலங்கை ஆட்சியாளர், அரசியல்வாதிகளிடமே உண்டு.

ஜெயவர்த்தன - அத்துலத்முதலி கம்பனியினரின் எண்ணங்கள், வழிவகைகள் குறித்து இந்தியா பொறுமை இழந்துள்ளது. இதை பிரதமர் ராஜீவ் காந்தியின் நாடாளுமன்றப் பேச்சு உணர்த்தியுள்ளது

பெப்ரவரி 9 ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பப்பட்ட டிமார்ஷ்டன் இலங்கை பற்றிய இந்தியக் கொள்கையின் புதிய அத்தியாயம் ஆரம்பமானது.

டிசம்பர் 19 யோசனைகளை, பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அடிப்படையே என்பதை இலங்கை அரசு பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்று பிரதமர் காந்தி தனது 'டிமார்ஷ்'ல் கேட்டிருந்தார்.

> 'இலங்கை: இந்தியா தீர்க்கமாகச் செயல்படவேண்டும்'— என்ற தலைப்பில் 'இந்து' பத்திரிகையில் மார்ச் 11 இல் பிரசுரமான பிரதான ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

தற்போதைய சூழ்நிலையில் இந்த அரசியல் அம்சங்கள் பொருத்தமானதாக இல்லை.

கொழும்பு அரசு தான் நினைத்த நேரத்தில் சாதகமான பதிலை தெரிவிக்கும் வரை இந்தியா காத்திருக்கப் போவது இல்லை

முற்றுகைக்கு உட்பட்டுள்ள தமிழருக்கு தனது உறுதியான ஆதரவை வழங்குவதற்கு இந்தியா சுதந்திரமாக முன்வந்து செயல்படவேண்டும்.

ஆனுல் திரு ஜெயவர்த்தனவும் அவரின் கூட்டாளிகளும் செயல்பட இன்னும் பல வழிகள் உள்ளன.

இலங்கை அரசின் இராணுவத் தீர்வு முயற்சிக்கு எதிராக தரையில் இந்தியா தனது கொள்கை வரிகளைச் செயல்படுத்த வேண்டும்.

கொழும்பின் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் மோதல் நீடிக்கும்; வன்செயல் அதிகரிக்கும் என்பதில் இந்தியா தெளிவாக உள்ளது.

இந்தியாவினுல் வகுக்கப்பட்ட நியாயமான தேவைகளுக்கு இலங்கை இணங்குமானுல் முதலில் தரையில் இடைத்த இராணுவ ரீதியிலான சாதகமான நிலைமையை இலங்கை அரசு பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

அப்படி இலங்கை செய்தால் சிக்கலைத் தீர்த்து இருநாட்டு உறவுகளுக்கும் மத்தியில் புத்திசாலித்தனமான முறையில் ஆக்கபூர்வமான அரசியல் அடிப்படையில் நிலைமையைச் சீர்திருத்த முடியும். (இ-ள)

## சேவாச்சிரமம் நிதி உதவி

பருத்தித்துறை, மார்ச் 24

யாழ் பல்கலைக்கழக மாணவிகளான செல்வி தங்கராசா புவனேஸ்வரி, செல்வி கே. மகாதேவா ஆகியோருக்கு உயர் கல்வி கற்பதற்கு கல்வி நிவாரண உதவியாக தலா ஆயிரம் ரூபாவை பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா வழங்கினுர். (இ-118)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 89
விஞ்ஞானப்பிரிவு
பௌதிகம்: திரு. சௌந்தி
மார்ச் 24 இல் | மாலை 5 - 00 மணி
தூய. பிரயோக | கணிதம் A. பத்மநாதன்
மார்ச் 25 இல் | மாலை 4 - 00 மணி

# உதயன்

24 - 03 - 1987 செவ்வாய்க்கிழமை

2 ஆவது பிரிவு
O/L DAY CLASSES
மார்ச் 25 இல்
காலை 8-00 மணி முதல் மாலை -30 வரை
(முற்றிலும் பாடசாலை வசதிகளுடன்)
விபரங்கட்கு:
Niru Tuition Centre
KONDAVIL.



நேற்று அதிகாலை கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளினால் சேதமுற்ற யாழ் ஆஸ்பத்திரியின் முன் சுவரையும், நகரில் உள்ள இரண்டு ஜவுளிக் கடைகளையும், மணிக்கூட்டு வீதியில் உள்ள வீடொன்றையும் படத்தில் காணலாம்.

(படம்:- ஜெயம்)

## வடக்கிலிருந்து கஜபா அணியினர் திருப்பி அழைப்பு

கொழும்பு, மார்ச் 24
யாழ் குடாநாடு முகாம்களில் அமர்த்தப்பட்டுள்ள கஜபா படையினர் திருப்பி அழைக்கப்படவுள்ளனர்.

அவர்களின் இடங்களுக்கு வேறுபிரிவு படையினர் அனுப்பிவைக்கப்படுவர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கஜபா படையைச் சேர்ந்த சுமார் நாலாயிரம்பேர் வடபகுதி முகாம்களுக்கு அவசரமாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### வாக்களிப்பு முடிவு

புதுடில்லி, மார்ச் 23
கேரளா, மேற்கு வங்காளம் ஜம்மு காஷ்மீர் மாநிலசட்டசபைகளுக்கு நேற்று நடந்த தேர்தல்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவது இன்று செவ்வாய் காலை ஆரம்பமாகின்றது. தேர்தல் முடிவுகள் இன்று பிற்பகலில் இருந்து வெளிவரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

சதி வழக்கு நேற்று நீதிமன்றில்

# குற்றப்பத்திரத்தை ஏற்பதற்கு எட்டு எதிரிகள் மறுப்பு

கொழும்பு, மார்ச் 24
அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக 23 பேர்மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

23 எதிரிகளில் பத்துப் பேர் மட்டுமே நேற்று மேல் நீதிமன்றத்தில் சமுகமளித்து இருந்தனர். இவர்களில் எட்டுப் பேர் குற்றப்பத்திரிகையை ஏற்க மறுத்து விட்டனர்.

சமுகமளிக்காத ஏனைய சந்தேக நபர்கள் நாட்டில் இல்லை.

23 எதிரிகளில் மூவர் தமிழர். ஒருவர் முஸ்லிம் ஏனையோர் சிங்களவர்.

சந்தேக நபர்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரான பத்மநாபாவும் ஒருவர்.

வன்செயல்களில் ஈடுபட்டது--

ஆயுதப்புரட்சி மூலம் அரசைக் கவிழ்க்கச் சதி செய்தது--

பயிற்சிக்காக ஆட்களைத் திரட்டி இந்தியாவுக்கு அனுப்பிவைத்தது.

ஆயுதங்களைச் சேகரித்தது--

ஆகிய குற்றச்சாட்டுகள் 23 சந்தேக நபர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

மேல் விசாரணை அடுத்தமாதம் மூன்றும் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பாடசாலைப் பரீட்சை இன்றுஇல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 24
இன்று 24 ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த பாடசாலைகளுக்கான பொதுப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் 26 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமைக்குரிய ஆண்டு 6-11 க்கான விஞ்ஞான பாடங்கள் அன்றைய தினம் நடைபெறும். 24, 25 ஆம் திகதிகளுக்குரிய பாடங்கள் முறையே 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஆண்டு 12, 13 க்கான வர்த்தகப் பரீட்சைகள் நேரசூசிப்படி நடைபெறும். (இ)

## ஈரோஸ் போராளிகள் 2 பேர் வீரமரணம்

யாழ்ப்பாணம் மார்ச் 24
ஈரோஸ் இயக்க மன்னார் பிராந்திய நிதிப் பொறுப்பாளர் சாந்தகுமார் (சாந்தன்) கிளிநொச்சி பிராந்தி வேலைத் திட்டப் பொறுப்பாளர் பரராசசிங்கம் (பரா) ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

கடந்த 21 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு போராளிகளும் உயிரிழந்தனர் என்று ஈரோஸ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தன் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பரா வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்

இருவருக்கும் ஈரோஸ் இயக்கம் வீர அஞ்சலியைத் தெரிவித்துள்ளது. (அ-எ)

## ஏப்ரலில்தான் திரும்புவார்

பாகிஸ்தான், எகிப்து கென்யா ஆகிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டு செல்லும் பிரதமர் ஆர் பிரேமதாச அடுத்த மாதம் 12 ஆம் திகதி தாய் நாடு திரும்புவார் (இ-எ)

(2-ஆம்பக்கமும் பார்க்க)

## வட்டமிட்டது

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியைச் சூழவுள்ள பகுதியை பொம்மர் நேற்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

குண்டு வீச வருவது போல விரைந்து தாழ்ந்து வருவதும் பின் குண்டு வீசாமலே மேலெழுந்து செல்வதுமாக பல தடவைகள் பொம்மர் வட்டமிட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பீதி காரணமாக இடம் பெயர்ந்து கோண்டாவில், மற்றும் அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். (இ-69)

## இன்று

நாக்பூர், மார்ச் 23
இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான 5-ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறும்.

ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் இன்றைய போட்டி இந்தியாவுக்கு முக்கியமானது ஒன்றாக அமைய உள்ளது.

இதுவரை நடந்த 4 போட்டிகளில் பாகிஸ்தான் 3 போட்டிகளில் வெற்றியீட்டியது இந்தியா ஒரு போட்டியில் வெற்றிபெற்றது (உ-எ)

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க


# இறுதி அறிவிப்பு

உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு ஜொலி ஸ்ரார், ஜொலியன்ஸ் விளையாட்டு கழகங்கள் இணைந்து நடாத்தும் 1987 ஆம் ஆண்டுக்கான வடக்கின் 'மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு" போட்டியில் உங்கள் அபிமான வீரரை தெரிவுசெய்ய இறுதிச்சந்தர்ப்பம்.

போட்டி முடிவு திகதி - 29.03.1987

நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு தான். உதயன், சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்களை கத்தரித்து அதில் உங்கள் அபிமான வீரரின் பெயரையும், பாடசாலையையும் எழுதி "மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு" தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமோ, அல்லது கீழ்காணும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிகளிலோ சேர்ப்பிக்க வேண்டும். கூப்பன்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின் அவைகளை ஒட்டிய உறையினுள் இட்டு உதயன் அலுவலகத்தில் கையளிக்கலாம்.

29-03-1987 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிக்குப் பின் எமக்கு அனுப்பி வைக்கப்படும் கூப்பன்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

வாக்கு பெட்டி வைக்கப்பட்டுள்ள இடங்கள்:
1 வை எம் சி. ஏ யாழ்ப்பாணம், 2. சிவா ஸ்ரோஸ், கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம், 3 ஷப்ரு நிதி நிறுவனம், 4 தர்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், 5. மைக்குரோ கொமினிகேசன், கொக்குவில், 6. ஜே. சி சி. லிமிடெட், உரும்பராய், 7. வட்டுக்கோட்டை ஸ்ரோஸ், வட்டுக்கோட்டை.

## மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு - 1987

நான்காவது வார இறுதியில் வாக்களிப்பு முடிவுகள்
(1000 வாக்குகளுக்கு மேல் பெற்றவர்கள்)

| பெயர் | வாக்குகள் |
|---|---|
| (1) பொ. பிரபானந்தன் (யாழ் இந்துக் கல்லூரி) | 14,820 |
| (2) என் இருபானந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) | 7,422 |
| (3) ஆ. வாகீசன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) | 4,947 |
| (4) பி. புவனேந்திரகுமார் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) | 4,611 |
| (5) க. டெரிமகான் (யாழ் மத்திய கல்லூரி) | 3,237 |
| (6) கே. என் ரவிக்குமார் (யாழ் இந்துக் கல்லூரி) | 1,422 |
| (7) ஆ. பி. சௌந்தரநாயகம் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) | 1,140 |
| (8) என். நித்தியரஞ்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி) | 1,029 |

★ தவிர்க்க முடியாத காரணங்களால் வட்டுக்கோட்டை, உரும்பராய் சாவடிகளில் அளிக்கப்பட்ட வாக்குகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை இவை இறுதி வார கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

★ இவ்வார இறுதியில் முன்னணியில் திகழும் வீரருக்கு வாக்களித்து ரூபா 50/-ஐ பரிசாகப் பெறும் அதிஷ்டசாலிகள்
1. திரு. சி சிவம், 394, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
2. திரு. க. ஜசோதரன், அருளானந்த முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

★ இவ்வார வாக்களிப்பில் பங்கு பற்றி ஒரு மாதத்துக்கு உதயன், சஞ்சீவி பத்திரிகைகளை இலவசமாக வாங்குவதற்கான பற்றுச் சீட்டைப் பெறும் இரு அதிஷ்டசாலிகள்:-
1. திரு. ரி. தர்சன்குமார், கனகசபை வீதி, மானிப்பாய்.
2. திரு. எஸ் நவநீதன், ஸ்ரீ பவனம், செட்டி தெரு, புலோலி கிழக்கு, பருத்தித்துறை

— கிரிக்கெட் போட்டிக் குழு

வடக்கின் மிகப் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலி ஸ்ரார்ஸ் ஜொலியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரை வாசகர்கள் தெரிவு செய்யும் போட்டி



வீரரின் பெயர் ____________
கல்லூரி ____________
வாக்காளர் பெயர் ____________
விலாசம் ____________
ஒப்பம் ____________


# தமிழ்ஈழத்துக்கு ஆதரவு எனக் கூறி 2 தமிழ்ப் படங்களுக்குத் தடை

கொழும்பு, மார்ச் 24
தமிழ் ஈழக் கோரிக்கையை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரித்துப் பிரசாரம் செய்வதாகக் கூறி இரண்டு தமிழ்ப் படங்களுக்குத் தடை. மற்றும் ஒரு படத்தில் ஒரு பகுதி தணிக்கை.

'விக்ரம்' படத்தில் 'வெட்டுக் கூட்டு பாடல்' காட்சி விடுதலைப் புலிகளை பாராட்டுவதாக அமைந்திருந்ததாம்

அதற்காக அந்தப் பாடல் காட்சியை வெட்டிய பின் படத்தைத் திரையிடும்படி தணிக்கைச்சபை உத்தரவிட்டது.

தணிக்கைசபை முன்னர் மொத்தம் மூன்று தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்டபோது இரகசியப் பொலிஸ் உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

'விக்ரம்' தவிர்ந்த மற்ற இரண்டு தமிழ்ப் படங்களும் முற்றாகத் தடைசெய்யப்பட்டன.

## சிக்கிய படையினர்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் இராணுவ வீரர்களின் விவரம் வருமாறு:-

உபசாந்த குணதிலக (கான்ஸ்டபிள் 77561), பாலித கருணாதிலக (கான்ஸ்டபிள் 13760), அமரசேன (கான்ஸ்டபிள் 91966144), சிறிமொர (22782), சந்திர சிறி (32628), பக்மிவெவ (24884), உபேவன்சே (23766), திலகுமார (24177).

மேற்கண்ட இராணுவ வீரர்கள் விடுதலைப்புலிகளினால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். (இ-10)

## யாழ்நகர்..-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அகன்றனர்.

இலங்கை வங்கி மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து வங்கிக் கிளைகள் மூடப்பட்டிருந்தன.

நகர்புறப் பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன (இ-எ)

யூனியன் ட்ரஸ்ட் அன் இன்வெஸ்மென்ட் லிமிடட்
தற்பொழுது தற்காலிகமாக
எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் அன்ட் சேவிஸ் (யாழ்) லிமிடட்
145, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பஸ்டியன் ஜேங்சன்) என்ற விலாசத்திற்கு மாற்றப் பட்டுள்ளது. தொலைபேசி- 22550

## யுத்தக் கைதிகள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முகாமுக்கு கவச வாகனங்களில் படையினர் எடுத்து வந்தனர்

மண்டைதீவிலிருந்து கோட்டை முகாமுக்கு இப்படி வரும் கவச வாகனங்களையும் நாங்கள் தாக்கினோம்.

இதனால் அவற்றைப் பாதுகாப்பதற்கு பண்ணைப் பகுதியில் மினி முகாம் ஒன்றை அமைக்க வேண்டிய நிலைக்கு படையினர் ஆளாகினர்

கோட்டை முகாமைப் போல பண்ணை விடுதிகளில் உள்ள முகாம் வலிமைமிக்கதாக இருக்கவில்லை சுமார் நூறு படையினரே இந்த முகாமில் இருந்தனர்.

இதனை நாம் நன்கு அவதானித்து தாக்குதலை நடத்தினோம்.

### 20 புலிகள் தாக்கினர்

விடுதலைப் புலிகளில் சுமார் 20 பேர் இந்த தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டனர்.

கொட்டடி, கோட்டைப்பக்கம், கடற்கரை ஆகியபகுதிகளில் இருந்து ஒரே நேரத்தில் எமது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

திடீர் ஆர்.பி. ஜி தாக்குதல் நடத்தப்பட்ட ஒரு சில விநாடிகளில் இராணுவத்தின் சென்றி நிலை உடைக்கப்பட்டது. பங்கர்கள் தகர்க்கப்பட்டன.

அடுத்த கண்ணிமைக்கும் நேரத்தில் முகாமுக்குள் விரைவாகப் பாய்ந்தனர் விடுதலைப் புலிகள்.

திடீர்த் தாக்குதலில் நடந்தது என்னவென்று தெரியாமல் அங்கு நிலைகுழம்பிய படையினரில் பலர் எம்மால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

எதிர்த்து தாக்க முயன்றவர்கள் எமது வேட்டுக்கு இரையாகினர்.

தற்போதைய நிலையில் இந்தத் தாக்குதல் மிக முக்கியமான ஒன்று என்றே கருதவேண்டும்.

இராணுவத்தின் கை ஓங்கிடுமோ என்ற மக்களின் தேவையற்ற சஞ்சல நிலை நீக்கப்பட்டதில் மகிழ்ச்சியே

நாவற்குழியில் நாம் நடத்திய எதிர்த் தாக்குதல் வித்தியாசமானது. அது வெடிப்பொருள்களை கொண்டு நடத்த திட்டமிடப்பட்ட தாக்குதல்.

ஆனால் இது வித்தியாசமானது! இது பதுங்கியிருந்து நடத்தும் தாக்குதலும் அல்ல அவர்களது அரண்களுக்குள் சென்றே அவர்களை விரட்டியடித்து ... சிறைப்பிடித்தோம் இவ்வாறு ... தெரிவித்தார். (அ-உ)

## மன உறுதி - --

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தக்கது.

ஜனவரியில் இருந்து இலங்கை அரசப்படைகள் நடத்திய இராணுவ நடவடிக்கைகளினால் புலிகளுக்கு இழப்பு ஏற்பட்டு இருந்தது.

அந்த இழப்பை ஈடு செய்யும் வகையிலும் புலிகளின் மனோ திடத்தை உயர்த்தும் வகையிலும் திட்டமிடப்பட்ட தாக்குதல் அமைந்திருந்தது.

புலிகளின் தாக்குதலுக்கான பதில் நடவடிக்கையை எதிர்பார்க்கலாம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன என்றார். (அ-எ)

## ராணுவ--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்.

சரணடைந்த எட்டு இராணுவத்தினரும் எமது பாதுகாப்பில் உள்ளனர்.

"ஓர் புதிய அத்தியாயத்தின் முதற்படி என்ற ... வெளியான ... துண்டுப்பிரசுரத்தில் இவ் ... தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 24 - 03 - 1987 தொலைபேசி இல. 24805, 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 / N /87 Telephone 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org